<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 396/2022

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.R.அண்ணாதுரை, SSI | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது தருமபுரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 29.09.2021–ம் தேதி காவல் நிலைய அலுவலலில் இருந்தபோது முனியப்பன் த/பெ.கன்னியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 1386/2021, இதச.279, 337 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 18.00 மணிக்கு சம்பவயிடம்சென்று சாட்சிகள் மாதையன் மற்றும் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான முனியப்பன்,

பெரியசாமி, முனியப்பன் த/பெ. காளியப்பன், மாதையன், ராமமூர்த்தி, முருகன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியான சீனிவாசன் என்பவரை 01.10.2021-ம் தேதி பகல் 12.00 மணிக்கு காவல்நிலையம் முன்பாகவைத்து கைதுசெய்து பின்னர் தக்கநிலைய பிணையில் விடுவிடுத்தேன். வழக்கில் காயம்பட்ட கன்னியப்பன் என்பவர் 06.10.2021-ம் தேதியன்று பெங்களூர் Sphars Hospital -ல் வைத்து இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 பிரிவிலிருந்து, இதச 279, 337, 304(A) ஆகிய பிரிவுகளுக்கு பிரிவுமாறுதல்செய்து பிரிவுமாறுதல் அறிக்கையை தயார்செய்தேன். **(06.10.2021 தேதியிட்ட சட்டப்பிரிவுமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்குகோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை –** (எதிரிதரப்பில்)

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 27.09.2021 என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு விபத்து குறித்து தகவல் தெரிவிக்கப்பட்ட தேதி 29.09.2021 என்றால் சரிதான். காலதாமதாக புகார் கொடுக்கப்பட்டதற்கு விளக்கம் எதுவும் புகாரில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் எந்த திசையில் வாகனங்கள் சென்றது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ளதாக காட்டப்பட்டுள்ள நபர்களை சாடசிகாளக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அ.சா.1 முனியப்பன் இவ்வழக்கு விபத்தினை நேரில்பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. விபத்து நடந்து மூன்று நாட்கள் கழித்துதான் நான் சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். எதிரி கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், நான் சரியாக வழக்கை புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வழக்கு விபத்தை

ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர்தான் அவரது இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.65 /2020

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.R.அண்ணாதுரை, SSI | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது தருமபுரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 22.09.2019– தேதியன்று காலை 09.00 மணிக்கு நிலையஅலுவலலில் இருந்போது சாலமன் க/பெ.மாது என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 581/2019 இதச.279, 337 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்ப்பட்டுள்ளது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணை எடுத்துக்கொண்டு அன்றையதினமே 10.00 மணிக்கு சம்பவயிடம்சென்று சாட்சிகள் சத்திஷ் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் அ.சா.ஆ3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான சக்திவேல், சதீஷ், சாலாம்மள், சந்திரசேகர், சரவணன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்கில் காயம்பட்ட

காளியப்பன் என்பவர் 22.09.2019-ம் தேதியன்று சேலம் அரசு மருத்துவமனையில்வைத்து இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 பிரிவிலிருந்து, இதச 279, 304(A) ஆகிய பிரிவுகளுக்கு பிரிவுமாறுதல்செய்து பிரிவுமாறுதல் அறிக்கையை தயார்செய்தேன். **(22.09.2019 தேதியிட்ட சட்டப்பிரிவுமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்குகோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u> –** (எதிரிதரப்பில்)

1. அ.சா.1 சாலாம்மள் என்பவர் விபத்தினை நேரடியாக பாக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகள் வழக்கு விபத்தினை நேரடியாக பாக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்து நடந்த இடத்திற்கு அருகேஉள்ள கடைகளில் இருந்த நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான், அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. வழக்கு விபத்து நடந்த இடம் அதிக போக்குவரத்து உள்ளபகுதி என்றால் சரிதான். வழியில் சென்றவர்கள் இவ்வழக்கு விபத்தை பார்த்ததாக சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான், அவ்வாறு சாட்சியம் யாரும் கொடுக்கமுன்வரவில்லை.

2. விபத்து நடந்த இடம் தார்சாலை என்றால் சரிதான், சாலையின் ஓரமாக விபத்து நடைபெற்றது. விபத்தில் இறந்துவபோன காளியப்பனுக்கு வயது சுமார் 80 இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் மாலை சுமார் 06.45 மணி என்றால் சரிதான். களியப்பன் எனபவர்தான் வயதுமுதிர்வின் காரணமாக மாலை நேரம் என்பதால் சரியாக கண் பார்வை தெரியாமல் வாகனம் வருவது தெரியாமல் சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இழப்பீடு

பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாரினை நான் சரியாக புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், இடத்தில்வைத்து ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நியைலத்தில் வைத்து ஆவணங்களை தயாரித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No. 628/2020

வழக்கு சாட்சி: PW:12 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R.வேடியப்பன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | ராஜேஷ் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது கீழ்கன்னியான்கொட்டாயில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்துவருகிறேன். தேதி, மாதம் ஞபாகம் இல்லை, சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பாக மதியம் சுமார் 02.00 மணியளவில் செட்டிக்கரையில் உள்ள மின்கம்பத்தில் நான் வேலை செய்துகொண்டிருந்தபோது திடீரென சத்தம்கேட்டு சாலைஅருகே சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டுயிருந்தது. விபத்தில் இரண்டு குழந்தைகளுக்கு அடிப்பட்டிருந்தது. வேறுஎதுவும் விபத்து குறித்து தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோதும் நான் இங்கு கூறியதைதான் கூறினேன்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாகவும், விபத்திற்கு ஜே.சி.பி வாகனம்தான் காரணம் என்றும்

**கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>குறுக்கு விசாரணை</u> –** (எதிரிதரப்பில் இல்லையெ தெரிவிக்கப்பட்டது).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No. 628/2020

வழக்கு சாட்சி: PW:13 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | கோவிந்தசாமி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

நான் தற்போது மகேந்தபுரத்தில் குடியிருந்து தமிழ்நாடு மின்சாரவாரித்தில் தற்காலிகமாக பணிபுரிந்துவருகிறேன். தேதி, மாதம் ஞபாகம் இல்லை, சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பாக மதியம் சுமார் 02.00 மணியளவில் செட்டிக்கரையில் உள்ள மின்கம்பத்தில் வேலை செய்வதற்காக பொருட்களை எடுக்க நான் சென்றபோது சாலைஅருகே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டுயிருந்தது. விபத்தில் யாருக்கு அடிப்பட்டிருந்த என்று எனக்கு தெரியாது. வேறுஎதுவும் விபத்து குறித்து தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோதும் நான் இங்கு கூறியதைதான் கூறினேன்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்தகாகவும், விபத்திற்கு ஜே.சி.பி வாகனம்தான் காரணம் என்றும்

கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** – (எதிரிதரப்பில் இல்லையெ தெரிவிக்கப்பட்டது).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.187 /2022

வழக்கு சாட்சி: PW: 6 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.A.K.சீனிவாசன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

நான் தற்போது தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிவில் சர்ஞ்சனாக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 03.06.2021–ம் தேதி மாலை 03.00 மணியளவில் பணியில் இருந்தபோது சுமார் 30 வயது மதிக்கதக்க மணி என்பவர் சிகிச்சைககாக அவரது சகோதரர் அசோக் என்பவர் அழைத்து வந்தார். மணி என்பவரை விசாரித்தபோது தன்னை அன்றையதினம் மதியம் 02.30 மணியளவில் அவரது வீட்டில்வைத்து தெரிந்த பத்து நபர்கள் கல் மற்றும் காலால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோரித்தபோது அவரது இடதுபக்க தலையில் 2x1x1 செ.மீ அளவில் கிழிந்த காயம் வீங்கிய காயத்துடன் காணப்பட்டது. எனவே அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவர் சிகிச்சை பிரிவிலிருந்து யாரிடமும் தெரிவிக்காமல் தன்னிச்சையாக சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து வழங்கஇயலாது என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் மணி என்பவரின் காயச்சான்றிதழ் மற்றும் விபத்து பதிவேட்டின்நகல் ஆகியவை நான் வழங்கியதுதான்.

(**விபத்துபதிவேட்டு நகல் அ.சா.ஆ.2 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிதரப்பில்)

காயத்தின் வயது குறித்து காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் அவர் கரடுமுரடான பகுதியில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்புள்ளதா என்றால், வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

(Chapter XXIII Code of Criminal Procedure)

வழக்கு எண். CC No. 381/2022

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.R.அண்ணாதுரை, SSI | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது தருமபுரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 28.12.2021– தேதியன்று காலை 12.00 மணிக்கு நிலையஅலுவலில் இருந்போது தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் இருந்து கிடைத்த தகவலின்பேரில் தனலட்சுமி முதல்நிலைகாவலர் மேற்படி மருத்துவமனை சென்றுபார்த்தபோது விபத்தில் அடிப்பட்ட முனுசாமி என்பவர் சிகிச்சையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மகன் கணேசன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவுசெய்து பின்னர் நிலையம் திரும்பி ஒப்படைத்ததை பெற்ற நான் நிலைய குற்ற எண். 1688/2021 இதச.279, 337 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணை எடுத்துக்கொண்டு அன்றையதினமே 13.00 மணிக்கு சம்பவயிடம்சென்று சாட்சிகள் சிவகுமார் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில்

சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான கணேசன், விக்னேஷ்வரன், சிவகுமார், சத்தியமூர்த்திஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்கில் காயம்பட்ட முனுசாமி என்பவர் 30.12.2021-ம் தேதியன்று தருமபுரி அரசு மருத்துவமனையில்வைத்து இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 பிரிவிலிருந்து, இதச 279, 304(A) ஆகிய பிரிவுகளுக்கு பிரிவுமாறுதல்செய்து பிரிவுமாறுதல் அறிக்கையை தயார்செய்தேன். **(30.12.2021 தேதியிட்ட சட்டப்பிரிவுமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்குகோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u> –** (எதிரிதரப்பில்)

1. அரசு மருத்துவனையிலிருந்து 28.12.2021-ம் தேதி காலை 08.00 மணிக்கு விபத்து குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் இவ்வழக்கை 28.12.2021-ம் தேதி பகல் 12.00 மணிக்கு எனது புலன் விசாரணையை எடுத்துக்கொண்டு, 13.00 மணிக்கு விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். விபத்து நடந்த இடம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 07 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் சொன்ன இடத்திற்கு சென்று புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆவணங்களை விபத்து நடந்த இடத்தில்வைத்து தயார்செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

2. விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டேன் என்றாலும், சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.166 /2021

வழக்கு சாட்சி: PW: 6 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.R.அண்ணாதுரை, SSI | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது தருமபுரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 21.04.2021–ம் தேதி காவல் நிலைய அலுவலலில் இருந்தபோது சென்னம்மாள் க/பெ.முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 335/2021 இதச.279, 337 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணை எடுத்துக்கொண்டு அன்றையதினமே 14.00 மணிக்கு சம்பவயிடம்சென்று சாட்சிகள் சக்திவேல் மற்றும் மணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான சென்னம்மாள், ஆறுமுகம், சக்திவேல், மணி ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

வழக்கில் காயம்பட்ட காளியப்பன் என்பவர் 25.04.2023-ம் தேதியன்று சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 பிரிவிலிருந்து, இதச 279, 304(A) ஆகிய பிரிவுகளுக்கு பிரிவுமாறுதல்செய்து பிரிவுமாறுதல் அறிக்கையை தயார்செய்தேன். **(சட்டப்பிரிவுமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்குகோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரிதரப்பில்)

1. விபத்து நடந்த தேதி 18.04.2021-ம் தேதி மாலை 15.00 மணி ஆகும். இவ்வழக்கின் புகார் 21.04.2021-ம் தேதி கொடுக்கப்பட்டது. காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது குறித்து புகாரில் எதுவும் குறிப்பிடவில்லை. நான் சொன்ன இடத்திற்குசென்று புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆவணங்களை விபத்து நடந்த இடத்தில்வைத்து தயார்செய்யவில்லை என்றாலும் சரியல்ல. விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்குஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்துகொண்டேன் என்றாலும், சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோனவர் வயதுமுதிர்வின் காரணமாக கவனக்குறைவாக சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 403/2022

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌரி | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | முருகன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது முத்துப்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியாது, வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை இவ்வழக்கு குறித்து விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 17.08.2021–ம் தேதி காலை 10.30 மணிக்கு அ.சா.1ம், அ.சா.2ம் அவர்களது வீட்டின் அருகில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து அவர்களை தகாத வார்த்தையால்பேசி அவர்களது இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தி கையால் அடித்து காயப்படுத்தி அதன்பிறகு பிளாஸ்டிக் ஸ்டுல், தோசை கரண்டி, தடி மற்றும் இரும்பு ராடால் அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில்

பார்த்ததாக கூறிவிட்டு தற்பொது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**-(எதிரிகள்தரப்பில் இல்லையென தெரிவிக்கப்பட்டது).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 403/2022

வழக்கு சாட்சி: PW: 6 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | லட்சப்பசெட்டி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது வெங்கடம்பட்டியில் குடியிருந்து நடத்துனராக பணிபுரிந்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 18.08.2021–ம் தேதியன்று காலை சுமார் 08.30 மணியளவில் முத்துபட்டியில் உள்ள பெருமாள் வீட்டுஅருகே வந்தபோலிசார் அங்கு தகராறு குறித்து ஆயவுசெய்து விசாரித்தற்கு என்னிடம் கையெழுத்து கேட்டதால் மேற்படி கையெழுத்து செய்துகொடுத்தேன். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் அங்கிருந்த மரக்கட்டை, இரும்புராடு, தேங்காய் உடைக்கும் மிசின், தோசைகரண்டி, செல்போன், லேப்டாப், இருசக்கரவாகனம் ஆகியவற்றை என்னிடம் காண்பித்தார்கள். என்னிடம் மேற்படி பொருட்களை காண்பித்தற்கு கையெழுத்து கேட்டதால் நான் போலிசாரிடம் கையெழுத்து செய்துக்கொடுத்தேன். **என்னிடம் காட்டப்டும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில்**

**உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காண்பித்த பொருட்களை போலிசார் எடுத்துச்சென்றனர். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பகுதிபிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் 18.08.2021-ம் தேதி காலை 08.00 மணியளவில் சம்பவயிடத்தை போலிசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தபோதும், 08.30 மணியளவில் சம்பவயிடத்திலிருந்து இவ்வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோதும் சாட்சியாக உடனிருந்து கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்போது இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை</u>** - (எதிரிகள்தரப்பில்)

1. போலிசார் என்முன்னிலையில்தான் என்னிடம் காட்டிய பொருட்களை எடுத்துசென்றனர். போலிசார் இருசக்கர வாகனத்தையும் எடுத்துசென்றனர். போலிசார் எடுத்து சென்ற பொருட்களில் லேப்டாப், செல்போன் இருந்தது என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோதும் மேற்படி விபரத்தை நான் கூறியுள்ளேன். பெருமாள் வீட்டிற்கு எதிரே நடுநிலைப்பள்ளி உள்ளது. சம்பவயிடத்தில் எனக்கு உறவினர்கள், நண்பர்கள் யாரும் இல்லை. நான் நர்சரி வேலையாக சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் நர்சரி வைப்பதற்காக இடம் பார்ப்பதற்கு சென்றேன். நான் அரசு பணியாளர் என்றால் சரிதான்.

2. நான் நர்சரி வைப்பதற்கு அனுமதிஎதுவும் தற்போதுவரை கேட்கவில்லை. அ.சா.2 பெருமாள் என்பவர் என்னுடன் ஏற்கனவே பணிபுரிந்து வந்துள்ளார் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்குசெல்லவில்லை என்றாலும், அதனால்தான் சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களை குறித்து என்னால் கூறமுடியவில்லை என்றாலும், என்னுடன் கையொப்பம் செய்தவர் பற்றியும் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து முத்துபட்டி சுமார் 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அ.சா.2 என்னுடன் வேலை செய்துவந்ததால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனற்ால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. போலிசார் பொருட்களை எடுத்துசென்றதை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 107/2024

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரம்யா | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | மூவேந்தன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

நான் தற்போது குள்ளனூரில் குடியிருந்து வீட்டுகுடிதனம் செய்துவருகிறேன். அ.சா.1 எனது தந்தை ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 19.09.2021–ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நீலபுரம்கொட்டாயில் உள்ள எனது தாயார் வீட்டில் இருந்தபோது எனது தந்தைக்கு சொந்தமான நிலத்தில் சக்தி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் டிராக்டர் ஓட்டி சென்றார்கள். எனது தந்தை அதுகுறித்து கேட்டபோது அவர்கள் அப்படித்தான் ஓட்டிசெல்வோம் என்று கூறினார்கள். அத்துடன் தேவடியா பையா, கண்டாரோலி பையா என்று திட்டினார்கள். அப்போது எதிரி சக்திவேல் கையால் எனது தந்தையின் கழுத்தில் அடித்து, டிராக்டிரில் இருந்த ரம்பத்தை எடுத்து இடதுகையை அறுத்தார், பின்னர் தலையில் வெட்டினார். பின்னர் எனது சித்தப்பா ராஜா அங்குவந்து எனது தந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எதிரிகள் இருவரும் எனது தந்தையை மருத்துவனைக்கு சென்றுவந்தவுடன் வெட்டாமல்விடமாட்டேன் என மிரட்டினார்கள். போலிசார் என்னை இதுகுறித்து விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**-(எதிரிகள்தரப்பில்)

1. சம்பவத்தன்று நான் எனது கணவர் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல, எனது தாயார் வீட்டில்தான் இருந்தேன். வழக்கு சம்பவம் நடந்தபோது நான் எனது தாயார் வீட்டில் இருந்தேன். எனது தாயார் வீட்டில் இருந்து சம்பவம் நடந்தஇடம் சுமார் 250 அடி தொலைவில் இருக்கும். எதிரிகள் எங்களுக்கு பங்காளி முறை என்றால் சரிதான். பிரச்சனைக்குறிய வழிதடத்தில் எதிரிகளுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. புகாரில் நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்ன்று எனது தந்தைதான் டிராக்டர் செல்வதை தடுத்து, எதிரிகளிடம் தகராறுசெய்து தாக்கியுள்ளார் என்றால் சரியல்ல.

2. எதிரிகள் தாக்கப்பட்டது குறித்து புகார் கொடுத்துவிடுவார்கள் என்பதற்கு பயந்து எனது தந்தை தவறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டதைவைத்து பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வீட்டில் இருந்தபோது சம்பவம் நடந்ததால் நான் நேரில் பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் எனது தந்தையை திட்டவுமில்லை, தாக்கி கொலைமிரட்டல் விடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 327/2023

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூஞ்சோலை | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | கண்ணுபெருமாள் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது மான்காரன்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2023–ம் வருடம் 3வது மாதம் தேதி ஞாபகம் இல்லை, காலை 11.00 மணியளவில் மான்காரன்கொட்டாய்க்கு அருகே உள்ள சிவன்கோவிலுக்கு சென்றபோது போலிசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள். போலிசார் வந்துசென்றதற்காக என்னிடம் கையெழுத்து கேட்டதால் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 27.02.2023–ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக

உடனிருந்து கையெழுத்து செய்துகொடுத்தேன் என கூறியுள்ளேன் என்றாலும், தற்போது எதிரிகளை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில் இல்லையென தெரிவிக்கப்பட்டது.)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 327/2023

வழக்கு சாட்சி: PW: 6 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | பரசுராமன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது மான்காரன்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 27.03.2023ம் தேதி காலை 07.00 மணியளவில் மான்காரன்கொட்டாய்க்கு அருகே உள்ள சிவன்கோவிலுக்கு நான் சென்றபோது அங்கு வந்திருந்த போலிசார் கோவிலில் நடந்த திருட்டு சம்பவம் தொடர்பாக வரைபடம் வரைந்துக்கொண்டனர். அப்போது என்னிடம் சாட்சியாக இருக்கசொல்லி கையெழுத்து கேட்டதால் நானும், பூஞ்சோலை என்பவரும் சாட்சி கையெழுத்து செய்துகொடுத்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில் )

என்முன்னிலையில்தான் போலிசார் வரைபடம் வரைந்தனர். வரைபடம் வரைந்ததில்தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். கோவிலில் திருடப்பட்டதாக சொல்லப்படும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரிதான். போலிசார் என்னிடம் காலை 10.00 மணிக்குதான் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொன்ன தேதியில், நேரத்தில் கோவிலுக்கு செல்லவில்லை என்றாலும், போலிசார் கேட்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 183/2024

வழக்கு சாட்சி: PW: 2 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமணன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

நான் தற்போது பொன்னையன்கொட்டாயில் குடியிருந்து கம்பிகட்டும் வேலைசெய்துக்கொண்டு வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 07.05.2024–ம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் எனது வீட்டிற்கு அருகில் போலிசார் வந்து விசாரித்தனர். பக்கத்து வீட்டில் நகை திருடுபோனதாக கூறினோம். போலிசார் சம்பவயிட்த்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக்கொண்டனர். அப்போது நானும், பெரியசாமி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். (**பார்வை மகஜர் அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள்தரப்பில்)

அ.சா.1 சாந்தி எனக்கு தங்கச்சிமுறை ஆவார். சம்பவம் நடந்த வீடு எனது வீட்டிற்கு ஒட்டினார்போல் உள்ளது. புகாரினை அ.சா.1 சாந்தி கொடுத்துள்ளார். புகார் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்தன்று நான் வீட்டில்தான் இருந்தேன். திருடுபோன வீட்டை போலிசாரிடம் யார் அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. சாட்சி பெரியசாமி எனது பங்காளி முறை

ஆவார். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது, படித்து காண்பித்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் முதன்மை சாட்சியத்தில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 183/2023

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியசாமி | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது மொன்னையன்கொட்டாயில் குடியிருந்து மாட்டுவண்டி ஓட்டிவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைதுதான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை, ஆறுமாதத்திற்கு முன்பாக மதியம் சுமார் 01.00 மணியளவில் எனது வீட்டிற்கு அருகேஉள்ள சின்னசாமி வீட்டில் திருடுபோனது தொடர்பாக போலிசார் அங்குவந்து வரைபடம் வரைந்தபோது சாட்சியாக இருக்க கேட்டதால் நானும், லட்சுமணன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – எதிரிகள்தரப்பில்

சின்னசாமி என்பவர் எனக்கு பங்காளி முறை ஆவார். சம்பவ வீடு எனது வீட்டில் இருந்து சுமார் 150 அடி தள்ளிஉள்ளது. திருடுபோன வீட்டினை நான் போலிசாரிடம அடையாளம் காட்டவில்லை. காவல்நிலையத்தில் வைத்து நான் பார்வை மகஜரில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் என்ன எழுதப்பபட்டுள்ளது என்று எனக்கு படித்து காண்பித்தார்கள். நானும், லட்சுமணனும்

கையெழுத்து செய்தோம். வேறுயாராவது பார்வை மகஜரில் கையொப்பம் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 183/2023

வழக்கு சாட்சி: PW: 4 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயகுமார் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது பிடமனேரியில் குடியிருந்து சொட்டுநீர்பாசனம் அமைக்கும் தொழில்செய்து வருகிறேன். கடந்த 26.06.2024–ம் தேதியன்று விடியற்காலை சுமார் 03.00 மணியளவில் நானும், சந்தோஷ் என்பவரும் தருமபுரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். பென்னாகரம் இரயில்வே கேட் மேம்பாலம் அருகே வந்தபோது போலிசார் எங்களை நிறுத்தினார்கள். போலிசாருடன் இரண்ட நபர்கள் இருந்தார்கள், திருட்டு வழக்கு தொடர்பாக அவர்களை பிடித்துள்ளதாக போலிசார் கூறினார்கள். ஆஜர் எதிரிகளை இரண்டுபேர் போலிசாருடன் இருந்தார்கள் (எதிரி சின்னராசு மற்றும் கருப்பசாமியை சாட்சி அடையாளம் காட்டினார்). போலிசாரிடம் எதிரி சின்னராசு நகையை தான்தான் கொள்ளைஅடித்தேன் என்று கூறினார். எதிரி கூறியதை போலிசார் லேப்டாப் மூலம்பதிவு செய்துக்கொண்டு எங்களிடம் சாட்சி கையெழுத்து பெற்றனர். என்னிடம் காட்டபப்டும் சின்னராசு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். போலிசாரிடம் நான் ஒருகையெழுத்துதான் செய்துகொடுத்தேன். **(சின்னராசு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நகை சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் கையொப்பம்

செய்தேன். என்னிடம் காட்டப்படும் கருப்பசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(கருப்பசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில்உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடையதுதான். போலிசார் என்னை இவ்வழக்கு குறித்து என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 26.06.2024–ம்தேதி அதிகாலை 03.00 மணியளவில் தருமபுரி to பென்னாகரம் செல்லும் இரயில்வே மேம்பாலம் அருகே சென்றபோது தருமபுரி நகர போலிசார் கருப்பசாமி என்பவரை கைதுசெய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றும், அதன்பின்பு காலை 09.30 மணிளயவில் எதிரி சின்னராசு குடியிருக்கும் தேன்கனிக்கோட்டையில் உள்ள கூடாரத்தில் இருந்து ஆஜர்செய்த வழக்கு செய்த வழக்கு சொத்தை கைப்பற்றினார்கள் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>குறுக்கு விசாரணை</u>** – (எதிரிகள் தரப்பில்)

நான் காவல்நிலையத்தில் வைத்து எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் சின்னராசு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் கையெழுத்து வாங்கிய காவல்அதிகாரியின் பதவி குறித்து எனக்கு தெரியாது. வழக்கு குற்றஎண் குறித்தும் எனக்கு தெரியாது. நான் இருசக்கர வாகனத்தில் எனது நண்பருடன் சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 1, 2 எதிரிகளின் தந்தை பெயர் மற்றும் ஊர் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

திருட்டு வழக்கு தொடர்பாக போலிசார் விசாரித்தனர். வழக்கு தொடர்பான காவல்நிலையம் குறித்து எனக்கு தெரியாது. எதிரிகள் என்முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 183/2023

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தோஷ்குமார் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது மொன்னையன்கொட்டாயில் குடியிருந்து சிக்கன்கடை வைத்து நடத்திவருகிறேன். கடந்த 26.06.2024–ம் தேதியன்று அதிகாலை 03.30 மணியளவில் நானும், விஜயகுமாரும் தருமபுரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றபோது பென்னாகரம் இரயில்வே மேம்பாலம் அருகே போலிசார் நின்று விசாரித்தக்கொண்டிருந்தனர். போலிசாருடன் இரண்டு நபர்கள் இருந்தனர். ஆஜர் எதிரிகளில் இரண்டுபேர் உள்ளனர். (சாட்சி சின்னராசு மற்றும் கருப்பசாமியை அடையாளம் காட்டினார்). திருடுபோன வழக்கு தொடர்பாக போலிசார் அவர்களை பிடித்துள்ளதாக கூறினார்கள். போலிசாரிடம் இருவரும் மொன்னையன்கொட்டாயில் திருடியதாக ஒப்புக்கொண்டனர். அப்போது சாட்சி கையெழுத்து கேட்டதால் நான் சாட்சி கையெழுத்து செய்துக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் சின்னராசு மற்றும் கருப்பசாமி ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள இரண்டவாது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(சின்னராசு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டவாது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.7 ஆகவும், கருப்பசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டவாது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கருப்பசாமி என்பவர் போலிசாரிடம் நகைகளை கொடுத்ததற்காக நான் கையெழுத்தை செய்துக்கொடுத்தேன். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 26.06.2024-ம்தேதி அதிகாலை 03.00 மணியளவில் தருமபுரி to பென்னாகரம் செல்லும் இரயில்வே மேம்பாலம் அருகே சென்றபோது தருமபுரி நகர போலிசார் கருப்பசாமி மற்றும் சின்னராசு ஆகியோரை கைதுசெய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றும், அதன்பின்பு காலை 09.30 மணிளயவில் எதிரி சின்னராசு குடியிருக்கும் தேன்கனிக்கோட்டையில் உள்ள கூடாரத்தில் இருந்து ஆஜர்செய்த வழக்கு செய்த வழக்கு சொத்தை கைப்பற்றினார்கள் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>குறுக்கு விசாரணை</u>** – (எதிரிகள் தரப்பில்)

1. நாங்கள் தருமபுரி பஸ்டான்டிற்கு செல்வதற்காக அதிகாலை 03.00 மணிக்கு சென்றோம். எனது வீட்டில் இருந்து பஸ்டான்டிற்கு பென்னாகரம் சாலை வழியாக செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் மேம்பாலத்திற்கு அடியில் இருப்புபாதைக்கு இடதுபுறமாக இருந்தனர். மேம்பாலத்திற்கு அடியில் செல்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் எவ்வளவு நேரம் அங்கிருந்து வந்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சென்றபோது போலிசாரிடம் நகை கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். எங்களை விசாரித்த போலிசாரின் பதவி குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கின் புகார் மற்றும் வழக்கு குற்றஎண் குறித்து எனக்கு தெரியாது. நான் அடையாளம் காட்டிய எதிரிகளின் ஊர் எனக்கு தெரியாது.

2. எதிரிகள் போலிசார் விசாரித்தபோது அவர்களது பெயரை கூறியதால் எனக்கு தெரியும். போலிசார் டைப்செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நானும், விஜயகுமாரும் கையெழுத்து செய்தோம், வேறுயார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை வழக்கு குறித்து விசாரிக்கவில்லை. போலிசார் தோடு, மூக்குத்தி, மோதிரம், தாலிசெயின் ஆகியவற்றை கைப்பற்றினார்கள் அதன் எடை தெரியாது. இருட்டாக இருந்ததால் நகைகள் என்ன மாடல் என்று எனக்கு தெரியாது. நானும், விஜயகுமாரும் காவல்நிலையம் சென்று கையெழுத்து எதுவும் செய்யவில்லை.

3. நான் கூறிய இடத்தில் வைத்து எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும், எதிரிகள் எந்த வாக்குமூலமும், நகைகளும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும், நான் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. போலிசார் எதிரிகளை எங்கு அழைத்துசென்றார்கள் எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 194/2024

வழக்கு சாட்சி: PW:1 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.பெரியசாமி | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது தருமபுரி கலெடரேட் அலுவலம் முன்பாக குடியிருந்து ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2024–ம் தேதி மாலை 07.30 மணிக்கு எனது இருசக்கர வாகனத்தை தருமபுரி டவுனில் உள்ள பூமாலை வணிகவளாகம் முன்பு நிறுத்திவிட்டு பூர்வீகா செல்போன் கடைக்கு சென்றேன். பின்னர் 08.00 மணியளவில் நான் கடையில் இருந்து திரும்பிவந்து பார்க்கும்போது எனது இருசக்கர வாகனம் காணவில்லை. பக்கத்தில் விசாரித்து தேடிப்பார்த்தபோது இருசக்கர வாகனம் கிடைக்கவில்லை. எனது Honda Activa இருசக்கர வாகனத்தின் பதிவுஎண். TN–29–AM–5107 ஆகும். எனவே நான் 14.06.2024–ம் தேதி காலை தருமபுரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 06.09.2024–ம் தேதி போலிசார் எனது வாகனம் கிடைத்துவிட்டதாக கூறியதை தொடர்ந்து நான் காவல்நிலையம் சென்று எனது வாகனத்தை அடையளாம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தில் மனுசெய்து எனது இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடைதுதான்.

**(வழக்கு சொத்துயுள்ள புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரி ஆஜர். எதிரிதரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No.118/2023

வழக்கு சாட்சி: PW:1 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகணேஷ் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது எஸ்.கொட்டாவூரில் குடியிருந்து டையல்ஸ் ஒட்டும் தொழில் செய்துவருகிறேன். தேதி ஞாபகம் இல்லை, 6–வது மாதம், 2022–ம் வருடம் காலை 10.30 மணிக்கு தருமபுரி பஸ்டிப்போ வழியாக நானும், மாது என்பவரும் எனது இருசக்கர வாகனத்தில் குரும்பட்டிக்கு சென்றோம். நான்தான் இருசக்கர வாகனத்தை ஓட்னேன். டிப்போ அருகே செல்லும்போது எங்களுக்கு முன்னால் சென்ற பிக்கப் வாகனம் இன்டிகேட்டர் போடாமல் வலதுபக்கமாக திரும்பியபோது எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு இடதுகாலில் பலமாக அடிப்பட்டது. மாது என்பவருக்கு இடது காலில் அடிப்பட்டது. எனவே நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அதேபிக்கப் வாகனத்தில் சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்க்கப்பட்டோம். பின்னர் பத்து நாட்கள் கழித்து தருமபுரி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிக்கப் வாகனத்தின் பதிவு எண் தெரியாது, ஓட்நரை பார்த்தால் அடையாளம் தெரியும். (எதிரி ஆஜரில்லை குவி.மு.ச 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது). விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u> –** ( எதிரிதரப்பில்)

1. விபத்து சமயத்தில் டையல்ஸ் வெட்டும் மிசினை இருசக்கரவாகனத்தில் எடுத்துசெல்லவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு வாகனம் ஓட்டும் உரிமம் இல்லை. நான் சம்பவத்தின்போது சாலையின் இடதுபுறமாக சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் விபத்தின்போது டைல்ஸ் வெட்டும் இயந்திரத்துடன் வாகனத்தில் சென்றதாலும், வாகனத்தை சரியாக ஓட்ட தெரியாமலும், முன்னால் சென்ற பிக்கப் வாகனத்தை முந்திசெல்ல முயன்று எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. பிக்கப் வாகனத்தின் ஓட்டுநர் சாலைவிதிகளை கடைப்பிடித்து கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால்தான் ஒருவாரம் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை நீதிமன்றத்தில் வைத்துதான் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், நான் பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No.118/2023

வழக்கு சாட்சி: PW: 2 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாது | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது எஸ்.கொட்டாவூரில் குடியிருந்து டையல்ஸ் ஒட்டும் தொழில் செய்துவருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை, சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக காலை 11.00 மணிக்கு தருமபுரி பஸ்டிப்போ வழியாக நானும், அ.சா.1 ஜெயகணேஷ் என்பவரும் எனது இருசக்கர வாகனத்தில் குரும்பட்டிக்கு சென்றோம். அ.சா.1 தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினார். டிப்போ அருகே செல்லும்போது எங்களுக்கு முன்னால் சென்ற பிக்கப் வாகனம் இன்டிகேட்டர் போடாமல் வலதுபக்கமாக திரும்பியபோது எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு இடதுகாலில் பலமாக அடிப்பட்டது. அ.சா.1 என்பவருக்கு இடது காலில் அடிப்பட்டது. எனவே நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அதேபிக்கப் வாகனத்தில் சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்க்கப்பட்டோம். பிக்கப் வாகனத்தின் பதிவு எண் தெரியாது, ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் தெரியும். (எதிரி ஆஜரில்லை குவி.மு.ச 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது). விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – ( எதிரிதரப்பில்)

1. விபத்து சமயத்தில் டையல்ஸ் வெட்டும் மிசினை இருசக்கரவாகனத்தில் எடுத்துசெல்லவில்லை. சம்பவத்தின்போது சாலையின் இடதுபுறமாக சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நாங்கள் விபத்தின்போது டைல்ஸ் வெட்டும் இயந்திரத்துடன் வாகனத்தில் சென்றதாலும், வாகனத்தை அ.சா.1 சரியாக ஓட்ட தெரியாமலும், முன்னால் சென்ற பிக்கப் வாகனத்தை முந்திசெல்ல முயன்று அ.சா.1–ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. பிக்கப் வாகனத்தின் ஓட்டுநர் சாலைவிதிகளை கடைப்பிடித்து கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. அ.சா.1–ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால்தான் ஒருவாரம் கழித்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை நீதிமன்றத்தில் வைத்துதான் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், அ.சா.1 அவரது கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தை மறைக்க கொடுத்துள்ள பொய்யாக புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No.118/2023

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருண்செல்வம் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | பாலு | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது எஸ்.கொட்டாவூரில் குடியிருந்து டையல்ஸ் ஒட்டும் தொழில் செய்துவருகிறேன். 28.06.2022–ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் தருமபுரி பஸ்டிப்போ அருகில் எனது இருசக்கர வாகனத்தில் வந்தபோது எனக்கு முன்னால் அ.சா.1 அவரது இருசக்கர வாகனத்தில் அ.சா.2 உடன் சென்றுகொண்டிருந்தார். அவர்களுக்கு முன்னால் சென்ற பிக்கப் வாகனம் திடீரென இடதுபக்கம் திரும்பியதால் அ.சா. 1 சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் இருவருக்கும் இடதுகாலில் அடிப்பட்டது. எனவே இருவரும் தருமுபுரி அரசு மருத்துவமனைக்கு பிக்கப் வாகனத்தில் அழைத்து செல்லப்பட்டனர். பிக்கப் வாகனத்தின் ஓட்டுநர் பாஸ்கர் ஆவார். அவரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். (எதிரி ஆஜரில்லை கு.வி.மு.ச 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது). விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u> –** ( எதிரிதரப்பில்)

பிக்கப் வாகனம் இடதுபுறமாக திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் அவ்வாறுத்தான் கூறியுள்ளேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், பார்த்திருந்தால் பிக்கப் வாகனம் திரும்பி திசை குறித்து

சரியாக கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.1 விபத்து நடந்தபோது டைல்ஸ் வெட்டும் இயந்திரத்தை வாகத்தில் எடுத்துசென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 ன் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்காமல் அ.சா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். STC No.118/2023

வழக்கு சாட்சி: PW: 4 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | ராஜாமணி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து கம்பிகட்டும் தொழில் செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 05.07.2022–ம் தேதி மாலை 06.00 மணியளவில் தருமபுரி பஸ்டிப்போ அருகில் விபத்து நடந்தது தொடர்பாக போலிசார் வரைபடம் வரைந்தபோது நானும், கார்த்திக்ராஜா என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துகொடுத்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிதரப்பில்)

அ.சா.1 எனது உறவினர் இல்லை. நான் பார்வை மகஜரில் பஸ் டிப்போ அருகே வைத்து கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 243/2023

வழக்கு சாட்சி: PW: 2 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமு | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | காளியப்பரெட்டி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது சோகத்தூரில் குடியிருந்து மாடுமேய்த்துவருகிறேன். அ.சா.1 சேகர் மற்றும் எதிரிகளை தெரியும். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் வழக்கு குறித்து என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 20.07.2022–ம் தேதி இரவு 10.00 மணியளவில் அ.சா.1 சேகர் என்பவர் சோகத்தூர் வாட்டர்டேக் அருகே வந்தபோது எதிரிகள் அவரை தகாதவார்த்தையால் திட்டி, கொலைமிரட்டல் விடுத்து, தாக்கியதை நேரடியாக பார்த்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள்தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 243/2023

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணவேணி | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | சீனிவாசன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

நான் தற்போது சோகத்துாரில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். அ.சா.1 சேகர் என்பவரை தெரியும். எதிரிகளை தெரியாது. இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் வழக்கு குறித்து என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 20.07.2022–ம் தேதி இரவு 10.00 மணியளவில் அ.சா.1 சேகர் என்பவர் சோகத்துார் வாட்டர்டேக் அருகே வந்தபோது எதிரிகள் அவரை தகாதவார்த்தையால் திட்டி, கொலைமிரட்டல் விடுத்து, தாக்கியதை நேரடியாக பார்த்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள்தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 253/2023

வழக்கு சாட்சி: PW: 3 நாள்: 09.01.2025.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவலிங்கம் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | சின்னசாமி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affir12 ptmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது இருளப்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். அ.சா.1 கிருஷ்ணன் மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 31.01.2023-ம் தேதி மாலை 03.00 மணியளவில் அ.சா.2 மாதம்மாள் வீட்டின் அருகே நான் சென்றபோது, அ.சா.2 மாதம்மாளுக்கு இடதுகையில் அடிப்பட்டிருந்தது. நான் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. அ.சா.2 ஆம்புலன்ஸ்ல் மருத்துவமனைக்கு சென்றார். வேறுஎதுவும் வழக்கு குறித்து விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 31.01.2023-ம் தேதி மாலை 04.00 மணியளவில் அ.சா.1 கிருஷ்ணன் அவர்களது நிலத்தில் இருந்தபோது எதிரிகள் அவரையும், அ.சா.2-யும் தகாத வார்த்தையால் பேசி கையாலும், கொடுவாளாலும் தாக்கி காயப்படுத்திதை நான் நேரில் பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 165/2024

வழக்கு சாட்சி: PW: 2 நாள்: 09.01.2025.

Evidence Recorded From:

| பெயர் | புவனேஷ்வரி (வேளாண்மைஉதவி இயக்குநர், காரிமங்கலம்) | ஜாதி: | |
|---|---|---|---|
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affir12 ptmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2025.

**முதல் விசாரணை** –

1. நான் தற்போது காரிமங்கலத்தில் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2019–ம் தேதி முதல் 01.05.2022–ம் தேதி வரை பென்னாகரம் வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்தேன். 2018 டிசம்பர் மாதம் மத்திய அரசால் பி.எம்.கிசான் திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. திட்டத்தில் வருவாய்துறையினரால் பயணாளிகள் கண்டிறியப்பட்டு அவர்களின் விவரம் பதிவேற்றம் செய்யப்படும். பிப்ரவரி 2019–ம் வருடம் விண்ணப்பம் அளித்தவர்களுக்கு பி.எம்.கிசான் திட்டத்தின்கீழ் முதல் தவணைதொகை விடுவிக்கப்ட்டது. அதனைதொடர்ந்து விவசாயிகளிடமிருந்து திட்டத்தின்படி தொகை வழங்கப்படவில்லை என்று புகார் வ12 ptந்தது. விசாரித்ததில் பயணாளிளின் பெயர், ஆதார் அட்டை எண், வங்கிகணக்கு எண், ஐ.எப்.சிகோடு ஆகியவற்றில் பிழைகள் இருந்ததாக தெரியவந்தது. அதுகுறித்து வருவாய்துறையினர் அதனை சரிசெயய்யமுடியாது என தெரிவித்துவிட்டனர். பயணாளிகள் உரிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்படி தவறுகளை வேளாண்மைதுறையினர் சரிசெய்து

கொள்ளலாம் என வேளாண்மைதுறை இயக்குநர் தெரிவித்தார். அதற்காக மாவட்ட அளவிலான வேளாண்மை இணை இயக்குநருக்கு User ID and Passward கொடுக்கப்பட்டது.

**(அரசுதரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியின் முதன்மை சாட்சியின் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 114/2018

வழக்கு சாட்சி: PW: 2 நாள்: 21.01.2025.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | H.M.மகேஷ், காவலர் RPF | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 21.01.2025.

**முதல் விசாரணை –**

நான் தற்போது பெங்களுர் தலைமையக இரயில்வே பாதுகாப்புபடையில் காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 16.09.2016–ம் தேதி தருமபுரி இரயில்வே பாதுகாப்புதுறையில் காவலராக பணிபுரிந்து வந்தபோது ஓசூர் இரயில்வே நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுடிருந்தேன். 16.09.2016–ம் தேதி காலை 07.36 மணிக்கு தடம் எண்.02–ல் பெங்களுர் முதல் எர்ணாகுளம் செல்லும் இரயில் எண்.12677 நின்றுயிருந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த செந்தமிழ் மற்றும் 25 நபர்கள் காவேரி தண்ணீர் பிரச்சனை தொடர்பாக தடம் எண்.02–ல் இருந்த இரயில் எண்.12677 முன்பாக அமர்ந்து போராட்டாம் செய்தார்கள். மேலும் இரயில் எஞ்சின் மீது ஏறியும் போராட்டாம் செய்தார்கள். கட்சிகொடியை கையில் ஏற்றிக்கொண்டு கர்நாடகா மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர்கள் காவேரி தண்ணீர் வழங்கவேண்டி போராட்டாம் செய்தார்கள். எனவே நானும், என்னுடன் இருந்த மற்ற காவலர்களும் சேர்ந்து போராட்டம் செய்தவர்களை அங்கிருந்து அப்புரப்படுத்தினோம். இரயில் எண்.12677 இரயில் நிலையத்தில் இருந்து காலை 07.38 க்கு புறப்பட்டுசென்றது. உள்ளுர் காவல்துறையினர் இரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து அழைத்துசென்று விசாரணை செய்தார்கள். இதுகுறித்து இரயில்வே காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**குறுக்குவிசாரணை**</u> – (எதிரிகள் தரப்பில்)

சம்பவதேதியில் அனைத்து கட்சியை சேர்ந்தவர்களும் போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தார்கள் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. ஏற்கனவே போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்ததன்பெயரில் நான் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தேன் என்றால் சரிதான். செந்தமிழ் என்பவரை தவிர மற்ற போராட்டகாரர்களின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது அனைத்து கட்சியினரும் போராட்டம் செய்தார்கள் என்றால் சரியல்ல, விடுதலை சிறுத்தை கட்சியினர் மட்டும்தான் போராட்டம் செய்தனர். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்களை கைதுசெய்துதிருப்போம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை